3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடுபுதூர் கடல் அலையில் சிக்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியுதவி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்ப்பார்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16—6—2019 ஆம் தேதியன்று என்னுடைய சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட புதூர் கடற்கரை கிராமத்தில் சச்சின், ரெகின், ரகீட் ஆகிய மூன்று மாணவர்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென்று புதூர் கடற்கரையில் ராட்சச அலை வந்து அவர்களை இழுத்துச் சென்றுவிட்டது. மூன்று இளம் பிள்ளைகள், படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடன் சந்தோஷமாக வாழ்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இந்தப் பிள்ளைகள்தான் படித்து, உயர்ந்து, அந்த குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நிலை இருந்தது. அவர்கள் இறந்து போனார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் விளக்கமாகப் பேச வேண்டாம் என்று நான் உங்களிடம் சொல்லிதான் அனுப்பினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு அதற்குண்டான பதிலைச் சொல்வார்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ஆக, அவர்களுடைய குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்போ. . .

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *ஒரு நிமிடம், உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை கடிதம் வாயிலாகக் கொடுத்தால், அந்தக் கடிதத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அதைமட்டும் சொல்லி கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டுதான் அமர வேண்டும். அதேபோல, zero hour—ல் அவர்கள் கொண்டு வருகின்ற கவன ஈர்ப்பு*

2019 ஜூலை 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அறிவிப்பின் சாராம்சத்தின் அடிப்படையில், சொல்ல வேண்டிய கருத்துகளை மட்டும் சொல்ல வேண்டும். நீண்ட சொற்பொழிவாகச் சொல்கின்றபோதுதான் தேவையில்லாத வாக்குவாதங்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் எல்லா உறுப்பினர்களுக்கும் ஆரம்பத்திலிருந்தே சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால், பிரச்சினைகளைப் பற்றி பேச வருகிறவர்கள் வேகமாக பேசுகின்றபோது அவையினுடைய நேரத்தை வீணடிப்பது மட்டுமல்ல, கவனத்தை ஈர்க்கிறோம் என்கிற அந்தத் தகவலையும் சொல்லாமல், நீங்கள் விரிவாக, ஆழமாகப் பேசுகின்ற காரணத்தினால் நேரம் குறைந்து போகிறது. சுருக்கமாக முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. ஜே.ஜி. பிரின்ஸ், கவனத்தை ஈர்த்து, அமருங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு தகுந்த உதவியும் செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–45

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், லட்சுமிபுரம் கிராமம், மண்டைக்காடு புதூர் என்னுமிடத்தில் 16–6–2019 அன்று புதூரைச் சேர்ந்த சிறுவர்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக கடல் அலையில் சிக்கி, திரு. சகாய ராஜன் என்பவரின் மகன் செல்வன் சகாய ரெகின், திரு. ஸ்டேன்டர் என்பவரின் மகன் செல்வன் இன்பென்டர் ரகீட், மற்றும் திரு. மிக்கேல் நாயகம் என்பவரின் மகன் செல்வன் சச்சின் ஆகிய மூன்று சிறுவர்கள் கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு, சச்சின் உடல் 16–6–2019 அன்றும், சகாய ரெகின் என்பவரின் உடல் 17–6–2019 அன்றும், இன்பென்டர் ரகீட் என்பவர் உடல் 18–6–2019 அன்றும் கண்டெடுக்கப்பட்டது என்ற செய்தி அறிந்து

நான் வேதனை அடைகிறேன். மேற்கண்ட துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று சிறுவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களின் குடும்பத்தினரின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் செயல்படுத்துதல், விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல் பற்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியத்தையும், மன வளத்தையும் மேம்படுத்தவும், கூட்டு மனப்பான்மையை உருவாக்கவும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும், அதை வெளிக்கொணரவும் மாண்புமிகு அம்மாவின் அரசால், நடப்பு ஆண்டில் 12 ஆயிரத்து 524 ஊராட்சிகளில் மற்றும் 528 பேரூராட்சிகளில் 64 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்" என்ற திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ்,*

அ) அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இரு பாலருக்கும் தனித்தனியாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையால் "அம்மா இளைஞர் விளையாட்டுக் குழு" அமைக்கப்படும்.